P.L.RAJ IAS & IPS ACADEMY
Building Bureaucrats Since 2006

## August 16, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. நாட்டின் 80-ஆவது சுதந்திர தினம் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இதையொட்டி, தில்லி செங்கோட்டையில் நடைபெற்ற பிரம்மாண்ட விழாவில் பிரதமர் மோடி தேசியக் கொடியை ஏற்றிவைத்து, முப்படையினரின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றதுடன், நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். இது, அவரது 13-ஆவது சுதந்திர தின உரையாகும். சுமார் 75 நிமிஷ உரையில், பிரதமர் கூறியதாவது:

(i) புதிதாக 5 அணு உலைகள் அமைக்கப்படும்:

- சில நாடுகள் வளங்களையும், உத்திசார் கடல் வழிகளையும் ஆயுதமாக பயன்படுத்துவது, இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது. இதுபோன்ற சூழலில் தற்சார்புதான் நம்மை காக்கிறது. எரிசக்தி, கனிமங்கள், நவீன தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட முக்கியத் துறைகளில் தற்சார்பை எட்டுவது காலத்தின் தேவையாகும்.
- அணுமின் உற்பத்தி துறையில் தனியாரை அனுமதிக்கும் சட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் 2047-ஆம் ஆண்டுக்குள் 100 ஜிகாவாட் அணுமின் உற்பத்திக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் உள்ள முன்மாதிரி வேக ஈனுலை தனது அணுப்பிளவு செயல்பாட்டை அண்மையில் தொடங்கியது, இத்துறையில் தற்சார்பை நோக்கிய முக்கிய படிக்கல்லாகும். 2030-ஆம் ஆண்டுக்குள் புதிதாக 5 அணுஉலைகளை அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- இதேபோல், ஆழ்கடல் பகுதியில் கச்சா எண்ணெய், எரிவாயு வளங்களைக் கண்டறியும் ஆய்வை விரைவுபடுத்துவதும் அவசியம். அதன்படி, நாட்டின் 99 சதவீத கடற்கரை பகுதிகளில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளது. கடல்சார் எரிசக்தி வளங்கள் ஆய்வு-உற்பத்திக்கான சமுத்திரமந்தன் திட்டத்துக்கு ரூ.85,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

(ii) குடிமை பாதுகாப்புப் படை நவீனப்படுத்தப்படும்:

- நவீன சவால்களை எதிர்கொள்ளும் வகையில், நாட்டில் குடிமை பாதுகாப்புப் படை நவீனப்படுத்தப்பட்டு, மக்களுக்கான பாதுகாப்பு உறுதி செய்யப்படும். இதற்காக விரிவான திட்டம் உருவாக்கப்படும்.

(iii) போதைப் பொருள் இல்லாத இந்தியா:

- வளர்ந்த இந்தியாவுக்கான போதைப் பொருள் இல்லாத இளைஞர்கள் என்ற 100 வார கால பிரசாரம் நாட்டில் நடைபெற்றுவருகிறது. போதைப் பொருளுக்கு அடிமையாவது பெரும் சவாலாக மாறிவரும் நிலையில், மேற்கண்ட பிரசாரத்தில் இளைஞர்கள் பெருவாரியாக பங்கேற்க வேண்டும். போதைப் பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்குவது நம் அனைவரின் கூட்டுப்பொறுப்பாகும்.

(iv) ஒலிம்பிக் போட்டிக்காக...:

- 2036-இல் ஒலிம்பிக் போட்டியை நடத்தும் வாய்ப்பை பெறுவதில் முக்கிய போட்டியாளராக இந்தியா விளங்குகிறது. ஒலிம்பிக்கில் 40 பிரிவுகளின்கீழ் 350 போட்டிகள் நடத்தப்படும் நிலையில், இதில் மூன்றில் இரு பங்கு - போட்டிகளில் பங்கேற்க இந்தியா தகுதி பெறாமல் போய்விடுகிறது. இந்த நிலையை மாற்ற 5 முதல் 15 வயது வரையில் உள்ள திறமையாளர்களைக் கண்டறிய தேசிய அளவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதன் மூலம் ஒலிம்பிக்கில் இந்தியாவின் பங்கேற்பு அதிகரிக்கப்படும்.

(v) சித்தாந்த நக்ஸல்கள்:

- வனப் பகுதிகளில் இருந்து ஆயுதமேந்திய நக்ஸல் தீவிரவாதத்தை ஒழிப்பதில் நாடு வெற்றி கண்டுவிட்டது. அதேநேரம், சித்தாந்த ரீதியிலான நக்ஸல்கள், நாட்டில் வன் முறை மற்றும் அராஜகத்தை ஊக்குவிக்க வாய்ப்புகளைத் தேடிக் கொண்டிருக்கின்றனர்.
- ஆயுதப் போராட்டம் முடிந்துவிட்டாலும், சித்தாந்த ரீதியிலான சவால் இன்னும் நீடிக்கிறது. சித்தாந்த நக்ஸல்களிடம் மக்கள் எச்சரிக்கையாக இருப்பதுடன், அவர்களை அடையாளம் கண்டு தனிமைப்படுத்த வேண்டும்' என்றார் அவர்.
- நாட்டில் அடுத்த ஓராண்டில் 1 கோடி இளைஞர்களுக்கு செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொழில்நுட்ப திறன் பயிற்சி வழங்கப்படும்; போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் இளைஞர்களுக்கு இலவசமாக இணையவழியில் பயிற்சி அளிக்கப்படும் என்று பிரதமர் மோடி அறிவித்தார்.

2. தியாகிகளுக் ஓய்வூதியம் ரூ.23,000- ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று முதல்வர் ச.ஜோசப் விஜய் அறிவித்துள்ளார். சென்னை கோட்டை கொத்தளத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் முதல்வர் விஜய் வெளி யிட்ட அறிவிப்புகள்:

i. தாய் நாட்டுக்காக தன்னலமற்ற தியாகம் செய்து நமது நாட்டின் அரும்பாடு பாதுகாப்புக்காகபட்ட முன்னாள் படைவீரர்களின் நலன் கருதி, அவர்களது இரு மகள்களுக்கு வழங்கப்படும் திருமண நிதியுதவி ரூ.25,000-இல் இருந்து ரூ.50,000-ஆக உயர்த்தி வழங்கப்படும்.

ii. மாற்றுத்திறன் கொண்ட முன்னாள் படைவீரர் மற்றும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர நிதி யுதவி ரூ.5,000-இல் இருந்து ரூ.7,000-ஆக உயர்த்தி வழங்கப்படும். தமிழக அரசால் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.23,000-ஆக உயர்த்தி வழங்கப்படும்.

iii. விடுதலைப் போராட்ட தியாகிகளின் குடும்பங்களுக்கு தமிழக அரசால் வழங்கப்பட்டுவரும் மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் ரூ.12,500-ஆக உயர்த்தி வழங்கப்படும். வீரபாண்டிய கட்டபொம்மன், முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி, மருது சகோதரர்கள், வ.உ.சிதம்பரனார் ஆகியோரின் வழித்தோன்றல்களுக்கு வழங்கப்பட்டுவரும் மாதாந்திர சிறப்பு ஓய்வூதியம் ரூ.11,500-ஆக உயர்த்தி வழங்கப்படும்.

3. தேசியப் பாடலான வந்தே மாதரம், தில்லி செங்கோட்டை சுதந்திர தின விழாவில் முதல் முறையாக ஒலித்தது. செங்கோட்டை கொத்தளத்தில் இருந்தபடி பிரதமர் மோடி அணிவகுப்பு மரியாதையை ஏற்றதும், ராணுவ இசைக்குழுவினர் வந்தே மாதரம் பாடலின் 6 சரணங்களையும் இசைத்தனர். விழாவில் பங்கேற்ற சிறப்பு விருந்தினர்களும் வந்தே மாதரம் பாடலை பாடினர்.

4. நிகழாண்டு தமிழக அரசின் 'தகைசால் தமிழர்' விருது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் எம்.கிருஷ்ணசாமிக்கு வழங்கப்பட்டது. இவ்விருதை கோட்டை கொத்தளத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் அவருக்கு முதல்வர் ச.ஜோசப் விஜய் வழங்கினார். விருதுடன் பாராட்டுப் பத்திரம், ரூ.10 லட்சம் காசோலையும் வழங்கப்பட்டது.

i. 2021-ஆம் ஆண்டு திமுக ஆட்சியில் முதல்வராக இருந்த மு.க.ஸ்டாலின், சுதந்திர தின நாளில், தமிழ்நாட்டுக்கும் தமிழின வளர்ச்சிக்கும் தொண்டாற்றிய பெருமக்களுக்கு 'தகைசால் தமிழர்' விருது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

ii. முதலாவது தகைசால் தமிழர் விருது மூத்த கம்யூனிஸ்ட் தலைவர்

என்.சங்கரய்யாவுக்கு வழங்கப்பட்டது. இவ்விருது 2022-இல் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் நல்லகண்ணு, 2023-இல் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, 2024-இல் மூத்த காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன், 2025-இல் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் காதர் மொகிதீன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

iii. நிகழாண்டு, முதல்வர் விஜய் அரசின் முதலாவது 'தகைசால் தமிழர்' விருது, தமிழக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரான கிருஷ்ணசா மிக்கு வழங்கப்பட்டுள்ளது.

5. பிரான்ஸில் 15 வயதுக்குள்பட்ட சிறார்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தத் தடை விதிக்கும் மசோதாவை அந்நாட்டின் உச்சநீதிமன்றம் தடுத்து நிறுத்தியுள்ளது.

i. கருத்துச் சுதந்திரம், தனிநபர் உரிமைகளை இந்த மசோதாவை மீறுவதாகவும், வயது சரிபார்ப்புக்கான முறையான வழிமுறைகளையும் நிபந்தனைகளையும் மசோதா சுட்டிக்காட்டத் தவறிவிட்டதாகவும் நீதிமன்றம் தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளது.

ii. உச்சநீதிமன்றத்தின் இக்கவலைகளைக் கருத்தில் கொண்டு சட்ட வரைவை மாற்றியமைக்குமாறு பிரதமரை அதிபர் இமானுவல் மேக்ரான் கேட்டுக்கொண்டுள்ளார். அடுத்தாண்டு அதிபர் தேர்தலுக்கு முன்பு இச்சீர்திருத்தத்தை அமல்படுத்த மேக்ரான் உறுதியுடன் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

6. கொரிய தீபகற்பத்தில் நிரந்தர அமைதியை நிலைநாட்டும் வகையில், வட கொரியாவுடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக தென்கொரிய அதிபர் லீ ஜே மியுங் மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார்.

i. இரு நாடுகளுக்கும் இடையிலான மோதல் போக்கைத் தடுத்து, அமைதி முறையில் இணைந்து வாழ்வதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ii. ஜப்பானிடம் இருந்து கொரியா விடுதலை பெற்ற தினத்தின் கொண்டாட்டத்தில் சனிக்கிழமை உரையாற்றிய அதிபர் லீ ஜே மியுங், '1950–53 கொரியப் போர் வெறும் போர் நிறுத்த ஒப்பந்தத்தோடுதான் முடிவுக்கு வந்தது; எனவே, அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து முறையான

அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்த பேச்சு நடத்த வேண்டும்.

iii. மேலும், வட கொரியாவின் அணு ஆயுதத் திட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான வழிமுறைகள் குறித்தும் இப்பேச்சில் விவாதிக்கப்படலாம். எல்லையில் பதற்றத்தைத் தணிக்கவும், மோதல்கள் வெடிக்காமல் தடுக்கவும் தென் கொரியா தொடர்ச்சியான மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்' என்றார்.

iv. இருப்பினும், தென் கொரியாவின் இத்தகைய அமைதிப் பேச்சுவார்த்தை அழைப்புகளை வட கொரிய அதிபர் கிம் ஜோங் உன் தொடர்ந்து நிராகரிப்பதோடு, தென் கொரியாவைத் தனது 'பரம' எதிரி நாடாகவும் அறிவித்து, அணு ஆயுத மற்றும் எல்லைப் பாதுகாப்பைப் பலப்படுத்தி வருகிறார்.

7. சர்வதேச பாட்மின்டன் சம்மேளனம் (பிடபிள்யுஎஃப்) சார்பில் 30-ஆவது உலக சாம்பியன்ஷிப் போட்டி புது தில்லி இந்திரா காந்தி வளாகத்தில் ஆக. 17-இல் தொடங்கி 23-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

i. சொந்த மண்ணில் நடைபெறவுள்ள போட்டி என்பதால் இந்திய வீரர், வீராங்கனைகள் கடும் சவாலை ஏற்படுத்துவர் எனத் தெரிகிறது. நட்சத்திரங்களான பிவி சிந்து, லக்ஷயா சென், சாத்விக்-சிராக் ஆகியோர் பதக்கம் வெல்லும் முனைப்பில் உள்ளனர். இவர்கள் தவிர மேலும் 5 பேர் தங்கள் திறமையை நிரூபிக்க காத்துள்ளனர்.

8. எஃப்ஐஎச் உலகக் கோப்பை 2026 ஹாக்கிப் போட்டியில் முன்னாள் சாம்பியன் இந்தியா 3-1 என்ற கோல் கணக்கில் வேல்ஸ் அணியை வீழ்த்தி சுதந்திர தினத்தில் வெற்றியுடன் தொடங்கியது.

i. நெதர்லாந்து மற்றும் பெல்ஜியத்தில் ஆடவர் மற்றும் மகளிர் உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டி நடைபெறுகின்றது. முன்னாள் சாம்பியன் இந்திய ஆடவர் அணி 51 ஆண்டுள் காத்திருப்பை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் மீண்டும் பட்டம் வெல்லும் முனைப்பில் உள்ளது.

9. குறைந்த வரி செலுத்துவோரின் வெளிநாட்டு சொத்துகளுக்கு வரி விதிக்கும் புதிய திட்டத்தை மத்திய நேரடி வரிகள் வாரியம் அறிமுகப்படுத்தியது.

i. இதுகுறித்து மத்திய நேரடி வரிகள் வாரியம் வெளியிட்ட அறிவிக்கையில்,

'சிறு வரி செலுத்துவோரின் வெளிநாட்டு சொத்து விவரங்களை வெளிப்படுத்தும் திட்டம் (ஃபாஸ்ட்-டிஎஸ்) எனப் பெயரிடப்பட்டுள்ள இத்திட்டத்தின்கீழ் கணக்கில் காட்டப்படாத வெளிநாட்டு சொத்துகள் மற்றும் வருமான விவரங்களை தாமாக முன்வந்து தாக்கல் செய்பவர்களுக்கு 60 சதவீதம் மட்டுமே வரி விதிக்கப்படவுள்ளது.

ii. ஆகஸ்ட் 16-ஆம் தேதி முதல் இத்திட்டம் அமலாகவுள்ள நிலையில் நிகழாண்டு டிசம்பர் 31-ஆம் தேதி வரை இணைய வழியில் சொத்து விவரங்களை சிறு வரி செலுத்துவோர் தாக்கல் செய்யலாம். சொத்து விவரங்களை தாக்கல் செய்யாத வெளிநாடுகளில் படிக்கும் மாணவர்கள், இளம் தொழில் வல்லுநர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள், வேறு இடத்துக்கு மாறிய வெளிநாடு வாழ் இந்தியர்களை (என்ஆர்ஐ) வரி வரம்புக்குள் கொண்டு வருவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

iii. அதன்படி 2026, மார்ச் 31-ஆம் தேதி நிலவரப்படி கணக்கில் காட்டப்படாத வெளிநாட்டு சொத்துகள் மற்றும் வருமானத்தின் மதிப்பில் 30 சதவீதம் வரியாக விதிக்கப்படும். அத்துடன் வரிக்கு நிகரான கூடுதல் தொகையும் விதிக்கப்படுவதால் மொத்த வரி 60 சதவீதமாக அதிகரித்துள்ளது.

iv. இரு வகைப்பாடுகள்:

- ஃபாஸ்ட்-டிஎஸ்-இன்கீழ் சொத்து விவரங்களை இரு வகைகளாக தாக்கல் செய்யலாம். முன்பு வரிக்கு உட்படுத்தப்படாத கணக்கில் காட்டப்படாத வெளிநாட்டு சொத்து அல்லது வருமானத்தின் மொத்த மதிப்பு ரூ.1 கோடியாக இருக்க வேண்டும்.
- ரூ.5 கோடி மதிப்பிலான வெளிநாட்டு சொத்துகள் அல்லது வருமானம் மீது ஏற்கெனவே வரி விதிக்கப்பட்டு அது வருமான வரி கணக்கில் குறிப்பிடப்படாமல் இருந்தால் ரூ.1 லட்சம் கட்டணத்துடன் வரி விதிக்கப்படும்.
- இத்திட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்படும் வருமானம் அல்லது சொத்து மீதான மூலதனத் தொகை வருமான வரிச் சட்டம் 1961 அல்லது கருப்புப் பண சட்டத்தின்கீழ் வரி செலுத்துவோரின் மொத்த வருமானத்தில் சேர்க்கப்படாது' எனத் தெரிவிக்கப்பட்டது.

10. அணுமின் உற்பத்தியில் தனியார் நிறுவனங்களை அனுமதிக்கும் சட்டத்தின் வரைவு விதிமுறைகளை மத்திய அரசின் கீழ் செயல்படும் அணுசக்தி துறை

வெளியிட்டுள்ளது.

i. அணுமின் உற்பத்தியில் தனியார் நிறுவனங்களை அனு மதிக்கும் மசோதா கடந்த ஆண்டு டிசம்பரில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து, அந்த மசோதா சட்டமானது. இதற்கு இந்தியாவை மாற்றியமைக்க அணுசக்தியை நிலையான முறையில் பயன்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் (சாந்தி) சட்டம் 2025 என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் மூலம், அரசின் வசம் மட்டுமே உள்ள அணுமின் உற்பத்தியில் தனியார் நிறுவனங்களும் ஈடுபட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ii. இந்தச் சட்டத்தின் வரைவு விதிமுறைகளை அணுசக்தி துறை அண்மையில் வெளியிட்டது. இந்த விதிமுறைகளின்படி அணுமின் நிலையங்களை இயக்கும் நிறுவனங்கள், அணுசக்தியால் ஏற்படக்கூடிய சேதங்களுக்கு காப்பீட்டுக் கொள்கை, நிதிப் பாதுகாப்பு அல்லது இரண்டையும் சேர்த்து வைத்திருக்க வேண்டும்.

iii. அணுசக்தியால் ஏற்படக் கூடிய சேதங்களுக்கு அணுமின் நிலையத்தை இயக்கும் நிறுவனம், சட்டபூர்வமாக அளிக்க வேண்டிய இழப்பீட்டின் அதிகபட்ச வரம்பு குறித்து 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிபுணர் குழுவை அமைத்து மத்திய அரசு மறுஆய்வு செய்ய வேண்டும்.

iv. ஒரு அணுமின் நிலையம் அல்லது அணு உலை வெளிநாட்டு வடிவமைப்பைக் கொண்டதாக இருந்தால், அந்த வடிவமைப்பு எந்த நாட்டில் உருவாக்கப்பட்டதோ, அந்த நாட்டின் ஒழுங்காற்று அமைப்பு அந்த வடிவமைப்பை அங்கீகரித்திருக்க வேண்டும். அத்தகைய அணுமின் நிலையம் அல்லது அணு உலை அந்த நாட்டில் அல்லது வேறு ஏதேனும் வெளிநாட்டில் செயல்பாட்டில் இருக்க வேண்டும்.

v. இவை உள்பட பல்வேறு விதிமுறைகள் அடங்கிய வரைவு ஆவணம் அணுசக்தி துறையின் வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

11. பெட்ரோல், டீசல் மற்றும் விமான (ஏடிஎஃப்) எரிபொருள்கள் ஏற்றுமதி மீது விதிக்கப்படும் சிறப்பு கூடுதல் கலால் வரியை (விண்ட்ஃபால் லாப வரி) ஆகஸ்ட் 15-ஆம் தேதி முதல் இரு வார காலத்துக்கு குறைத்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

i. உலகளாவிய விலை உயர்வு, போர் அல்லது அரசியல் மாற்றங்களால்

ஒருகுறிப்பிட்ட துறைக்கு திடீரென கிடைக்கும் கூடுதல் லாபத்தின் மீது இந்த விண்ட்ஃபால் வரி விதிக்கப்படுகிறது. உள்நாட்டு இருப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்த வரி விதிக்கப்படுகிறது. அதன்படி, மேற்காசிய போர் காரணமாக, இவற்றின் உள்நாட்டு இருப்பை உறுதி செய்யும் நோக்கில் டீசல் மற்றும் விமான எரிபொருள்கள் ஏற்றுமதி மீது கடந்த மார்ச் 27-ஆம் தேதியிலிருந்தும், பெட்ரோல் ஏற்றுமதி மீது மே 16-ஆம் தேதியிலிருந்தும் விண்ட்ஃபால் வரியை மத்திய அரசு விதித்தது. தற்போது இந்த வரிகளை இரு வார காலத்துக்கு குறைத்து உத்தரவிடப்பட்டுள்ளது.

ii. அதன்படி, டீசல் ஏற்றுமதி மீதான சிறப்பு கூடுதல் கலால் வரி லிட்டருக்கு ரூ.25.50 என்ற அளவிலிருந்து ரூ.24-ஆகவும், விமான எரி பொருள் ஏற்றுமதி மீதான சிறப்பு கூடுதல் கலால் வரி லிட்டருக்கு ரூ.22-லிருந்து ரூ.19.50-ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

iii. பெட்ரோல் ஏற்றுமதி மீது விதிக்கப்பட்ட ரூ.3.50 சிறப்பு கூடுதல் கலால் வரி, ஆகஸ்ட் 15 முதல் முழுமையாக ரத்து செய்யப்படுகிறது என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

iv. உள்நாட்டு நுகர்வுக்காக அனுமதிக்கப்பட்ட பெட்ரோல், டீசல் மீதான தற்போதைய வரி விதிப்புகளில் எந்தவித மாற்றமும் இல்லை என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.